செய்தித் தாளாகப் பதிவு பெற்றது.

[வெள்ளிக்கிழமைதோறும் வெளி வருவது

# இந்து சாதனம்

சைவபரிபாலனசபை வெளியீடு.

பிரதி விலை: சதம் 10.

ஆரம்பம்: விரோதி ஞு (1889) ஆவணி மீ 28 உ. அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அ௦] யாழ்ப்பாணம்:- கீலக ஞு மார்கழி மீ கஉ உ வெள்ளிக்கிழமை (27-12-1968) [இல-ஙு-அ

# நல்லூரில் வேதாகம பாடசாலை

## சிதம்பரம் நாவலர் விழாவில் சிவ. உ. சோமசேகரம்

["இந்துசாதனம்" அபிமான விருபர்
திரு. மா. பாலசுப்பிரமணியம் அவர்கள் சிதம்பரம், தென்னிந்தியா]

சிதம்பரத்திலுள்ள ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையில் கார்த்திகைத்திங்கள் 26ஆம் நாள் ஸ்ரீ.ல.ஸ்ரீ நாவலர் பெருமானின் 89 ஆவது ஆண்டு குருபூஜை விழா சென்னை மகாவித்துவான் உயர்திரு. மே. வீ. வேணு கோபால்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

வித்தியாசாலைப் பொறுப்பாளர் திரு. தி. க. இராசேசுவரன் வரவேற்புரை நிகழ்த்தினர்.

யோகி ஸ்ரீமத். சுத்தானந்த பாரதியார் எழுதியுள்ள ஸ்ரீ. ல. ஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் வரலாற்று நாடகத்தைப் பள்ளிமாணவர்கள் நடித்துக் காண்பித்தனர், நடிப்பு மக்களிடத்தில் சமய உணர்ச்சியைப் பெரிதும் உண்டாக்கியது குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் மாணவிகள் ஸ்ரீலஸ்ரீ நாவலர்பெருமானின் வரலாற்றைப் பாடல்கள் மூலமும் பரதநாட்டிய மூலமாகவும் நடத்தி அஞ்சலி செய்தனர். மகாவித்துவான் உயர்திரு. வேணுகோபால் பிள்ளை பேசுகையில் "உரை நடையை முதலில் வகுத்துக் கொடுத்தவர் நமது ஸ்ரீலஸ்ரீ. நாவலர் பெருமானே ஆவர். அதற்காக நாம் அவரை எவ்வளவு போற்றினும் ஈடாகாது. நாவலர் பெருமான் விட்டுச்சென்ற கல்விச் செல்வம் வளர்ந்து கொண்டே வருகின்றது நாவலர் பெருமான் வடமொழிச் சொற்களையும் எவ்வாறு தமிழ் மொழியில் இயற்றியுள்ளார் என்பதனையும் நாம் பார்க்கவேண்டும். மேலும் தமிழகத்தில் எத்தனையோ பதிப்புச் செல்வங்கள் வெளிவந்துள்ளன. ஆனால் நமது நாவலர் பெருமானின் பதிப்புச் செல்வம் ஒன்றுதான் பிழைகள் காணமுடியாத பதிப்புச் செல்வமாகும். ஆகவே நாவலர் பெருமானின் பதிப்புச் செல்வம் ஒன்றுதான் முதற்பரிசுக்கு உரியனவாகும், நாவலர் பெருமானுக்கு அருள் உள்ளம் வளர்ந்து கொண்டு வந்தது போல், நாவலர் பெருமானின் பதிப்புச்செல்வம வளர்ந்து கொண்டே வருகின்றது" என்று கூறினர்.

யாழ்ப்பாணம் திரு. சிவ. உ. சோமசேகரம் பாராட்டுரை கூறுகையில் யாழ்ப்பாணத்தில் நமது நாவலர் பெருமானின் திருவுருவச்சிலை நிறுவவேண்டி ஓர் கமிட்டி அமைக்கப் பட்டிருக்கின்றது, ஆனால் இவ்வையம்பதி மக்கள் நாவலர் பெருமானின் திரு

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

புவனியிற் போய்ப்பிற
வாமையில் நாள்நாம்
போக்குகின் றோமவ
மேயிந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற
வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை
வாய்திரு மாலாம்
அவன்விருப் பெய்தவு
மலரவ னாசைப்
படவுநின் னலர்ந்தமெய்க்
கருணையு நீயும்
அவனியிற் புகுந்தெமை
யாட்கொள்ள வல்லாய்
ஆரமு தேபள்ளி
யெழுந்தரு ளாயே.

திருச்சிற்றம்பலம்
மாணிக்கவாசகசுவாமிகள்

### நாவலர் நல்வாக்கு

இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும்பொருட்டேயாம்.

—0—

## மார்கழிமாத நடை பஜனை

— ஒரு சிவதொண்டன் —

'மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்' என்பதை உணர்ந்து மலரயனும், திருமாலும் நாம் புவனியிற் போய்ப் பிறவாமையின் நாளை எல்லாம் அவமே போக்குகின்றோம் என அவாவுற்று நிற்ப, அரியதாகிய மானிடப் பிறவி நமக்கு எளிதிற் கிடைத்திருப்பவும்; யாம் மாயையின் வசப்பட்டு, 'மாடுண்டு கன்றுண்டு மக்களுண்டென்று' மகிழ்கின்றோமேயன்றி அவைகளால் நமக்குக் கேடுண்டு என்பதை உணராது, வல்வினையில் ஆழாது காப்பவனாகிய பரம் பொருளை ஏத்தாது வாளா வாழ்கின்றோம்.

தேவர்களது உஷக்காலமாகிய இம் மார்கழி மாதத்திலாவது நாம அதிகாலையில் துயில் நீத்து நீராடிச் சந்தியாவந்தனம் புரிந்து ஆசாரசீலராய் உள்ளும் புறமும் தூய்மை மிக்குடையராய் ஆன்றோர் அருளியவாறு அவன் நாமத்தைத் தெருவுதோறு மலறி நடை பஜனை புரிதல் வேண்டும்.

காரிகையார்கள் தம் வாழ்வில் நம்வாழ்வு கடைப்படாவண்ணம் கண்கள் இரண்டும் அவன் கழல் கண்டு

(தொடர்ச்சி 2- ஆம் பக்கம்)

பக்திக்கு அடுத்தது சுத்தம்
சுத்தம் சுகம் தரும்.




மில்க்வைற்சோப்
வாங்கிப் பாவித்து
அதிக இலாபமடையுங்கள்.

நேயர்கள் நெஞ்சம்

## நம்மைச் சைவப்பெருமக்களாக வாழச் செய்த நாவலர் பெருமானுக்கு கைம்மாறு செய்வோம்

"திருக்கோயிலும் மடாலயமும் சமம்"
— (ஆகமம்) ஸ்ரீலஸ்ரீ நாவலர்.

ஸ்ரீலஸ்ரீ நாவலர் பெருமான் சைவமும் தமிழும் உலகெங்கும் ஒளிபெற்று விளங்கவே தமது வாழ்வை அர்ப்பணித்தார். சைவ வளர்ச்சி நீண்டு என்றும் பொலிய வேண்டுமென்ற அவரது ஆவல் சைவப்பிரகாச மடாலய மொன்றை அமைத்து சிவபூசை மகேசுர பூசை சிவபுராணபடனம் வேதாகம தேவார பாடசாலை முதலிய பணிகள் என்றென்றும் நின்று நிலவ நல்லூர் தெற்கு வீதியே ஏற்ற இடமெனக் கருதச் செய்தது. சைவப்பிரகாச மடாலயமமைத்தற்கெனவே 1874-ம் ஆண்டு நிலத்தினை விலைக்கு வாங்கி ஒரு மடாலயத்தை அமைத்து இயன்றவரை பணியும் செய்தார். அவர் செய்த சாதனப்படி அவரது உயிரோடு தொடர்ந்த ஆவல் முதலில் நிறைவேற்றப்பட வேண்டும். அப்பணியைச் செய்வதன் மூலமே அவரது வழிவந்த நாம் அவருக்குக் கைம்மாறு செய்தவராவோம். நாவல பெருமானின் முதல் மாணவர் ஐ. க. சதாசிவம் பிள்ளையவர்கள் நாவலர் தருமங்களைப் போற்றிக் காத்து விருத்தி செய்த பெருமகன். அவர்களது சாதனப்படி சிதம்பரம், வண்ணார்பண்ணை, நல்லூர் தருமப்பணிகள் சைவப் பொதுமக்கள் தருமமாக நடைபெற வேண்டுமென எழுதப் பட்டுள்ளது உறுதியாகியது.

வண்ணார்பண்ணைத் தருமம் அரசினரால் பாடசாலைச் சொத்தென்ற முறையில் எடுக்கப்பட்டு விட்டது. நல்லூர் நிலமும் அரசினர் கைவசமே உள்ளது. வண்ணார் பண்ணை பாடசாலைக்கு உரியதென எடுத்த சொத்துக்கள் பிற தருமங்களுக்கு மெனவே சாதனத்தில் காணப்படுகிறது. நல்லூரில் உள்ள நிலம் சைவப்பிரகாச மடாலயத்துக்கெனவே நாவலரவர்களால் சாதனம் செய்யப்பட்டுள்ளது. எனவே அரசினர் மனம் விரும்பி நாவலர் சைவப்பிரகாச மடாலயத்துக் குரிய நிலத்தினை பணிசெய்ய முன் வந்துள்ள பொதுமக்களிடம் ஒப்படைக்குமாறு வேண்டுகோள் விடுக்கின்றோம். பொதுமக்கள் தருமச் சொததாக நிலத்தினைப் பெற்று நாவலர் விரும்பிய சைவப்பிரகாச மடாலயப் பணியை முதலில் செய்து முடித்து மேலும் விரும்பியபடி மணி மண்டபம் சிலை எதனையும செய்யுமபடி சைவப் பெருமக்களையும் நாவலரபிமானிகளையும் கனவான்களையும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை அன்பர்களையும் பணிவுடன் வேண்டுகின்றோம்.

ச. பொன்னுஸ்வாமி, சரசாலை, சாவகச்சேரி
கு. அம்பலவாணபிள்ளை 'புலவரகம்' சுன்னாகம்
க. செ. பாலசுப்பிரமணியஐயர் புன்னாலைக்கட்டுவன்
ந. சபாரத்தினம்பிள்ளை நல்லூர், யாழ்ப்பாணம்
கா. இரகுநாதன், நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்;

## நாயன்மார்கட்டில் திருவாசக விழா

யாழ் நாயன்மார்கட்டு சைவசமய அபிவிருத்திக் கழகத்தின் ஆதரவில் நாயன்மார்கட்டு ஸ்ரீ இராஜ இராசேசுவரியம்பாள் ஆலயமகாமண்டபத்தில் எதிரேவரும 3-1-69 வெள்ளிக்கிழமை திருவாசக விழா கொண்டாடப்பெறும். அன்று அதி காலை 3-00 மணி தொடக்கம் மாணிக்கவாசகசுவாமிகள் திருவீதி உலா வலம்நிகழும். விழாவில் பல அறிஞர்கள் கலந்து உரைநிகழ்த்துவா

சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னுமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

கீலகஞு மார்கழி மீ கஉ-உ வெள்ளிக்கிழமை [1968]

## திருவாதவூரர் திருத்தாள்போற்றி

சைவசமயிகள் சிவசம்பந்தத்தையடையும்பொருட்டே சரியை கிரியை யோகம் ஞானம் ஆகிய நான்கு மார்க்கங்களையும்சைவாகமங்கள் வகுத்துள்ளன. இம் மார்க்கங்களைச் சைவர்கள் எந்நாளும் அநுட்டித்தல் வேண்டும். அதன் காரணமாகவே வருடத்தின் ஒவ்வொருமாதத்திலும் இறைவழிபாட்டுக்குரிய விசேட தினங்கள் குறிக்கப்பெற்றிருக்கின்றன. அந்தமுறையில் இப்பொழுது பிறந்திருக்கின்ற மார்கழி மாதம் ஒரு சிறந்த மாதமாகும். அது தேவர்களுடைய விடியற்காலமாகும். இம்மாதத்தில் நிகழும் திருவெம்பாவைப் பூசைக்காலம் சைவர்கள் சிவனை வழிபட்டு நற்கதியடைதற்கு மிகச் சிறந்த காலம். ஆலயங்களிலும் மடாலயங்களிலும் வித்தியாசாலைகளிலும் முறையாகத் திருவெம்பாவைப் பூசைதிருவெம்பாவைஓதல்திருவாதவூரடிகள்புராணம் படித்தல் என்பவற்றைச் சிறப்பாக மக்கள்புரிவார்கள். பல அடியார்கள் இவற்றிலே பங்குபற்றி திருவாசகம் திருக்கோவையார்என்பவற்றின் இன்பத்தை நுகர்ந்து திருவாதவூரடிகளுடைய திவ்விய சரித்திரத்தைச் சிரவணஞ் செய்து அவரை வழிபடுவார்கள்.

திருவாதவூரடிகள் பாடியருளிய திருவாசகம் திருக்கோவையார் என்னும் திருமுறையைத் தில்லைநடராசப் பெருமானே மானுட வடிவம் தாங்கி ஏட்டில் எழுதினமையே அவருடைய பெருமைக்குச் சான்றாகும். அவற்றுக்குப் பொருள் கூறும்படி தில்லை வாசிகள் அவரைக் கேட்க அவற்றுக்குப் பொருளாவார் அந்த நடராசப்பெருமானே என்று திருக்கரத்தினால் சுட்டிக் காட்டி விட்டு மறைந்தருளினார் நமது பரமசாரியர். வாசகத்தாற் கருதப்படும் பொருள் வாச்சியம் என்று சொல்லப்பெறும் இத்திருவாசகம் திருக்கோவையார் ஆகியவற்றுக்கு வாச்சியமாவார் சிவபெருமானே எனத் தில்லைவாழ்வார்க்கு அறிவுறுத்திச் சுவாமிகள் மறைந்து பாலுடன் நீர் கலந்த தன்மையைப்போலச் சிவனுடன் இரண்டறக் கலந்தனர்.

"மொழிந்த வாசகமே வாசகம் அதற்கு வாச்சியம்
தூசகல் அல்குல் வேய்த் தோளிடத் தவனே" என்று

துதித்தனர் சிவப்பிரகாச சுவாமிகள்.

திருவாதவூரடிகளுடைய திருவுள்ளத்தில் நிறைந்த இறைவனுடைய அன்பே அமுத வாக்கியங்களாகிய திருவாசகம்திருக்கோவையாராக வெளிவந்தன. அவை ஓதுபவர்களுடைய மனத்தைக் கரைத்து மலத்தைக் கெடுக்குந் தகையன. சுவாமிகளை ஆண்டருளிய ஆண்டானிலக்கணமும்கூறவியலாதது. அவன் அருளே கண்ணாகக் காணினல்லால் இப்படியன் இந்நிறத்தன இவ்வண்ணத்தன் இவனிறைவன் எனவெழுதிக் காட்டொணாதே' என்றனர் வாகீசப் பெருந்தகையார். ஆண்டானின் இலக்கணம்போல அடியார் இலக்கணமும் கூற முடியாததாகும். 'தொண்டர் தம்பெருமை சொல்லவும் பெரிதே' என்றனர் ஔவைப்பிராட்டியார். மாணிக்கவாசகசுவாமிகளுடைய பெருமையும் அளக்க முடியாததாகும். ஆனால் அவரை ஞான குருவாகக் கொண்டு வழிபட்டு அவரருளிச் செய்த திருவாசகம் திருக்கோவையாராகிய இரு பிரபந்தங்களையும பொருளறிந்து பக்தியுடன் ஓதுகின்றவர்கள் திருவருளைப் பெறுவார்கள்.

திருவாதவூரடிகளுடைய திருவடிகளை
வந்திப்போமாக.

## திருக்கேதிச்சரத்தில் திருவாசக சாதனையும் விழாவும்

ஷை விழா திருக்கேதிச்சரம்திருவாசகமடத்தில் ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்ட ஆதரவில் மார்கழி மீ 11ஆம் உ (25-12-68) முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. தொடர்ந்து மார்கழிமீ 20உ (3-1-69) வரை நடைபெறும் இவ்விழாவில் தினமும் காலையில் திருவெம்பாவை பாராயணம் வேதபாராயணம், தியானம் என்பனவும் மாலையில் புராணபடனம் சொற்பொழிவுகள் என்பனவும் சிறப்புற நடைபெறும். பல அறிஞர்கள் பங்குபற்றுவார்கள்.

## இந்து கலாசாரத்தைக் கற்பிக்குக

பேராதனைப் பல்கலைக் கழகத்தில் இந்து கலாசாரத்தைக் கற்பித்தலைப் பற்றி வேண்டிய ஆலோசனைகளைப் புரிதற்கு யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை, வட இலங்கைச் சைவாநுட்டானசபை, வேதாகம சைவ சித்தாந்த சபை, இந்து கலாச்சாரச்சபை மூதலிய கழகங்களினது ஆதரவில் யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபைத் தலைவர் சைவ சித்தாந்தவித்தகர் திரு வே. நாகலிங்கம் அவர்கள் தலைமையில்

30-12-68 திங்கட்கிழமை பிப 5 மணியளவில் கல்லூரி வீதிச் சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்திலொரு பொதுக் கூட்டம் நடைபெறும்.

## ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் அவர்கள் நாளை ஈழம் வருகின்றார்கள்

தாயகத்தில் கடந்த ஒருமாசகாலத்துக்கு மேலாக சமயப்பிரசாரமும் சங்கீத கதாகாலட்சேபமும் புரிந்து வந்த, மதுரைத் திருஞானசமபந்தராதீன நல்லூர்க்கிளை மடத் தலைவர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் அவர்கள் நாளை 28-12-68 சனிக்கிழமை விமான மார்க்கமாக ஈழத்துக்கு வருகின்றார்கள். நல்லூரில் விளங்கும் ஷை ஆதீனத்தில் திருவெம்பாவை வழிபாடு திருவாதிரை விழா மணிவாசகப் பெருமான் திருவீதி உலா்வலம், ஆருத்திரா தெரிசனைவழிபாடு என்பன யாவும வழமைபோல இனிது நடைபெறும். (ந.நி)

## மார்கழிமாத நடை பஜனை

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

களிக்க கூடும் அன்பினிற் கும்பிடலும் அவன் ஆடும்போது அடியின்கீழ் இருந்து பண்களி கூர்தரு பாடலோடாடல் பயின்று மகிழ்ந்து வாழலுமாய பெருவாழ்வினையே நாம் என்றென்றும் வேண்டி நிற்றல் வேண்டும.

'முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளாய்ப் பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியன் சீரடிபரவும் அடியாருறவு கொண்டு நாம் ஆர்த்தபிறவித் துயர்கெடுவான்வேண்டிச் சோதியாய் நின்ற ஆகி திறம பாடிச்' சங்கம் அரற்றி இல்லங்கள் தோறும சென்று, 'போது ஆர் அமளிக்கு' நேசம் வைத்தோரையெல்லாம் துயில் நீப்பித்து, முத்திநெறி அறியாது வாழ்வோருக்கு அவர்களும் முத்தியை அடைவான்வேண்டி அவர்களுக்குப் பத்திநெறியை அறிவித்து, அவர்களை எல்லாம் இறைபணியில் ஈடுபடச் செய்தல் வேண்டும்.

இவ்விதமாய் யாம் உள்நெக்குநின்று உருகி 'விண்ணுக்கொரு மருந்தாம் வேத விழுப்பொருளைப்' பாடிப் பரவினோமாயின் அவன் எம் கண்ணுக்கு இனியனாய் எம் மகத்துத் தானே வந்து எம்மைத் தலையளித்து ஆட்கொண்டருளுவான்.

ஆகவே இம் மார்கழி மாதம் முழுவதும் நடை பஜனை செய்ய முடியாவிட்டாலும், திருவெம்பாவை நாட்களாகிய பத்துத் தினங்களிலுமாவது யாம் தினமும் அதிகாலையில் திருப்பள்ளி எழுச்சி, திருவெம்பாவை, திருப்பாவை ஆகியவைகளையும, பிற திருவாசகத் திருமுறைகளையும நடை பஜனை செய்தும் மற்றையோரையும நம்மோடழைத்து இறைவன் கழலை சேர வாரும் செகததீரே என ஊக்கிப் பஜனை செய்வித்தும் பேரின்பப் பெருவாழ்வு எய்துவோமாக.

## நீதியரசர்திரு. பொன், ஸ்ரீஸ்கந்தராசா

நீதியரசர் திரு. பொன். ஸ்ரீஸ்கந்தராசா அவர்களுடைய பிரிவு நமது நாட்டுக்குப் பெரும் நட்டமாகும். நீதபதியாகக் கடமையாற்றிய காலத்தில் வழக்குகளை முறையாக விளங்கி துலாக்கோல் போல நடுநின்று நீதிவழங்கினர்.

யாவரும் அவருடைய கடமையை மெச்சினார்கள். இளைப்பாறிய பின்பு அவர் இலங்கை இந்து மாமன்றத்தினது தலைவராகக் கடமையாற்றினார். சிவ பக்தியிலுயர்ந்தவர். அடியார்களை அன்புடன் உபசரிப்பார், அவர்சைவத்துக்கும் தமிழ் மொழிக்கும் ஆற்றிய தொண்டைப் பாராட்டி மதுரைத் திருஞானசம்பந்தாதீனத் தலைவர் "சிவநெறிச் செலா" என்ற பட்டத்தை வழங்கினர்

திருக்கோணேஸ்வராலயப் பிரதேசத்தை ஓர் புனித இடமாகப் பிரகடனஞ் செய்விதற்குப் பெருமுயற்சி யெடுத்துள்ளனர்.

அவ் விஷயத்தைப்பற்றி விசாரணை செய்தற்கு முன்னை நாள் ஸ்தலத் தாபன மந்திரி அவர்களால்நியமிக்கப்பட்டவிசாரணைக் குழுவுக்கு அவர் தலைவராக நியமனஞ்செய்யப்பெற்றனர். பின்பு ஸ்தலத் தாபன மந்திரி அவர்களுக்கும் பிரதம மந்திரி அவர்களுக்கும் அவ்விஷயத்தைக் குறித்துக் கருத்து வேற்றுமை உண்டானபொழுது அவர் அப்பதவியைத் துறந்தனர். கல்வியறிவு ஒழுக்கம் நடுவுநிலைமை ஈகை இன்சொல் புறங்கூறாமை முதலிய பண்புகள் நிறைந்த ஒரு தலைவரை இழந்துவிட்டோம்.

அவருடைய பாரியாருக்கும் பிள்ளைகளுக்கும் மற்றுஞ்சுற்றத்தவர்களுக்கும் எங்கள் அநுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

## திருவெம்பாவை உற்சவம்

சிதம்பரம் ஸ்ரீ சிவகாமசுந்தரிசமேத ஸ்ரீ நடராசமூர்த்திக்கு மார்கழி மீ 11உ (25-12-68) ல துவசாரோகணமாகி உற்சவம் நடைபெற்று வருகின்றது.

31-12-68ல் தங்கசைலாய வாகனஉற்சவமும், 1-1-69ல் பிக்ஷாடன உற்சவமும், 2-1-69ல் இரதோற்சவமும் நடைபெறும். 3-1-69 வெள்ளிக்கிழமை சூரியோதயத்திற்கு முன் ஆயிரக்கால்மண்டபத்தில் ஆருத்திரா அபிஷேகமும், உதயத்தில் ஆருத்திரா தரிசனமும், பிற்பகல் புஸ்பப் பல்லக்குக் காட்சியும் நடைபெறும். (ந. நி.)

## நல்லூரில் வேதாகம பாடசாலை

(1-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)

வுருவச்சிலை செய்து விட்டீர்கள் என்பதனைக்கண்டு நான் மகிழ்ச்சி அடைகின்றேன். சமய வளர்ச்சிக்காக நாங்கள் யாழ்ப்பாணத்தில் கலாசார ஸ்தாபனம் அமைத்துள்ளோம், கலாசாரப வளர்ச்சி பெற்றுக்கொண்டுவரும். கல்விக்கும அரசியலுக்கும் சம்பந்தம் இருக்கவே கூடாது, ஆகவே ஆசிரியர்கள் நாவலர் பெருமானின் சீடர்களாக இருந்துகொண்டு சிறார்களிடத்தில் நாவலர் பெருமானின் பண்பாடுகளைப் பயிற்சி அளித்துக் கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு தில்லையம்பதி ஸ்ரீ நடராசப் பெருமானின் திருக்கோயிலுக்கு சமீபம் நாவலர் இவ்விதயாசாலையை அமைத்திருப்பதுபோல் எங்கள் யாழ்ப்பாணம் நல்லூர் ஸ்ரீ முருகப்பெருமான் திருக்கோயில் சமீபம் வேத சிவாகம பாடசாலை அமைப்பதற்கு முடிவு செய்திருக்கின்றோம் என்றும் கூறினர்.

## ஸ்ரீ வைகுண்ட ஏகாதசி

வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமான் தேவஸ்தானத்தில் நிகழும் கீலகஞு மார்கழி மீ 16உ (30-12-68) திங்கட் கிழமை காலை 6 மணிக்கு சுவர்கவாசல் தெரிசனையும் இரவு கருடசேவை உற்சவமும 10 மணிதொடக்கம் அருட்கவி சீ. விநாசித்தம்பி யவர்களால் "தூது சென்ற மாதவன்" என்னும் பொருள் பற்றிய கதாப்பிரசங்கமும் 1 மணி முதல் ஆழ்வார் வே. க. மயில்வாகனம் அவர்களால் "பக்த பிரகலாதனும் திருநாம மகிமையும்" என்னும் பொருள் பற்றிக் கதாப்பிரசங்கமும் நடைபெறும்,

## சைவசமயஅபிவிருத்திக்கழகம்

தாயகத் தமிழறிஞர் திரு. வி. ஜி. சீனிவாசன் அவர்கள் யாழ். நாயன்மார்கட்டு சைவ சமய அபிவிருத்திக்கழகத்தின் ஆதரவில் நாயன்மார்கட்டு ஸ்ரீ இராச இராஜேஸ்வரியம்பாள் ஆலய மகா மண்டபத்தில் இன்று மாலை 7-00 மணியளவில் "மாணிக்கத் தமிழ்" என்னும் அரும் பொருள்பற்றி ஆய்வுரை வழங்குவார். (ந. நி.)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

செல்லையா சண்முகநாதன் - கோண்டாவில் கிழக்கு
வழக்கு இல. M B 8770 —வழக்காளி
எதிராக
வயித்திலிங்கம் இரத்தினம் சண்முகராசா - மஞ்சத்தடி கோண்டாவில் —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 8770-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் இரு துண்டுக் காணிகள் 1969-ம் ஆண்டு தை மாசம் 29-ம் திகதி புதன் கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல்வட்டி ரூபா 1152-50 ம் 21-1-67 தொடக்கம் 6-12-67 வரைக்கும் ரூபா 1000/00 க்கு 9வீத வட்டியும் அதன் பின் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 217/64 ஆதலக்கோட்டுச் செலவு ரூபா 100/00 கழித்து அறவிடப்படும். இவ்வாதனங்கள் 26-6-64ம் திகதியில் 7727 இலக்கம் கொண்ட ஈட்டு உறுதிப் படி ரூபா 5500/00 க்கு முதல் ஈடாக அமைந்திருக்கிறது.

காணிகளின் விபரம்:

1. வடமராட்சி, யாழ்ப்பாணம் டிஸ்திறிக், யாழ்ப்பாணப் பகுதி. நல்லூர் கோவிற்பற்று கோண்டாவில் இறை "காப்பனை" நிலப் பரப்பு 2ம, கிணறும் செய்பயிர் வான்பயிர்களும். இதற்கு எல்லை கிழக்கு ஒழுங்கை, வடக்கு சின்னையா கார்த்திகேயசுவின் ஆதனம், மேற்கு வயித்தலிங்கம் இரத்தினம் சொர்ணலிங்கத்தின் ஆதனம், தெற்கு தற்சமயம் ரோடு. இதடங்கலும் இதைச்சேர்ந்தவைகளும்.

2. ஷெ. இறை "கொக்கல் காடும் கமட்டனும்" நிலப்பரப்பு 4 ம் வீடும். வடக்கு எல்லைக் கிணற்றிலும் அதை சேர்ந்தவைகளில் [illegible] வழி பாய்க்கால் பாவிப்பு உரித்தும். இதற்கு எல்லை கிழக்கு இ[illegible]னம் தியாகராசாவின் ஆதனம். வடக்கு கார்த்திகேசு இராமலிங்கம் பெண் உருத்திரத்தின் உரிமைக்காரரின் ஆதனம். மேற்கு மரு[illegible]லிங்கம் துரைராசாவின் ஆதனம். தெற்கு ஒழுங்கை முகப்பும் சுப்பையா பெண் சின்னத்தங்கத்தின் உரிமைக்காரரின் ஆதனம். இதடங்கலும் இதைச் சேர்ந்தவைகளும்.

கா. தர்மலிங்கம்
உரும்பராய், 25-11-68, கொம்மிஷனரும் விலமதிப்பாளரும்
எம் 315. 27-12-68.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

1. நவரத்தினம் தம்பிராசாவும் மனைவி
2. தவமணி — புத்தூர் மேற்கு —வழக்காளிகள்
இல. M. B. 7658 எதிராக
1. சங்கரப்பிள்ளை குமாரசிங்கம் வன பரிபாலன பாதுகாப்பாளன் குருநாகல்
2. மனைவி மலைபாக்கியம் புத்தூர் மேற்கு
3. பொன்னம்பலம் துரைஐயா வன காதுகாப்பாளன் மாத்துறை —எதிரிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 7658-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் காணிகளை 1969ம் ஆண்டு தை மாதம் 24ம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக்காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- ரூபா 7412-ம 7-9-65 தொடக்கம் 15-11-66 வரையில் ரூபா 7000-ற்கு 6 வீத வட்டியும் அதன்பின் பணம் முற்றாக இறுபடும் வரையில் முழுக் கூட்டுத் தொகைக்கு 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபா 406-68ம.

காணிகளின் விபரம்

1. வடமராட்சி யாழ்ப்பாணம் டிஸ்திறிக் புத்தூர் கோவில்பற்று புத்தூர் தெற்கிறை வலிகாமம் கிழக்கு கம்பியனும் அதைச்சேர்ந்தவைகளும பரப்பு நில லாச்சம் 75 ம வான்பயிர் செய்பயிர்களும் கிணறும். இதற்கு எல்லை கிழக்கு கீழே சொல்லப்படும இரண்டாம் காணி: வடக்கு 2ம், 3ம் எதிரிகளின காணி மேற்கு தம்பிப்பிள்ளை பெண் சின்னம்மாவின் ஆதனம்- தெற்கு ஒழுங்கை. பதிவு இலக்கம் K 64/124 இதில் சொரியலாய் 2/3 பங்கு

2. ஷெ இறை "கம்பியன தோட்டமும் மேல் நிலமும். பர நில லாச்சம் 10 எல்லை கிழக்கு வேலுப்பிள்ளை சுப்பையாவின் ஆதனம். வடக்கு 2ம் 3ம் எதிரிகளின் ஆதனம. மேற்கு மேலே சொல்லப்பட்ட 1ம காணி தெற்கு ஒழுங்கை. பதிவு இலக்கம் K 64/125 இதில் சொரியலாய் 2/3 பங்கு

'முருகன் இல்லம்" க, செல்வத்துரை,
இணுவில, 9-12-68. கோமிஷனரும் விலைமதிப்பாளரும்.
M 320 27-12-68

---

## கோட்டு விற்பனவு விளம்பரம

கணபதிப்பிள்ளை, யோம்பலமும் பெண் இலட்சுமிப்பிள்ளையும் காரைதீவு — வழக்காளி
இல. M. B, 9679 எதிராக
தம்பையா, பொன்னுத்துரை தனசாப்பாகவும் அவரின் காலம் சென்ற பெண் யோகம்மாவின் T. 1983 இலக்க வழக்கின் படி பராமரிப்புக்காரருமாக காரைநகர் மேற்கு — எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M· B 9679-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் துண்டுக்காணி 1969-ம் ஹு தை மீ 19-உ ஞாயிற்றுக்கிழமை முற்பகல 10-30 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:— முதல வட்டி ரூபாய் 6137/— 13-1-68 தொடக்கம் 21-6-68 வரைக்கும் ரூபாய 5000/-க்கு 6வீத வட்டியும அதன்பின முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 329-44ம

ஆதன விபரம்

வடமராட்சி யாழ்ப்பாணம் டிஸ்றிக் தீவுப்பகுதி காரைதீவு கோவில்பற்று காரைதீவு மேற்கு இறை [illegible] உறுதிப்படி 4 நிலப் பரப்பும் அளவுப்படியும் ஆட்சிப்படியும் 4 நிலப் பரப்பும 5, 1/2 குழியும, இதில் அடங்கிய தென்னைமரங்களும் பனைமரங்களும வீடுகளும் ஆது அடங்கிலும் இவ்வாதனத்தின் கிழக்கு எல்லை-கந்தையா அருணாசலத்தின ஆதனம். எல்லை வடக்கும் தெற்கும் ஒழுங்கை. மேற்கு-வைத்திலிங்கம் தமபி வாயத்தின் ஆதனம். இவ்வாதனத்திற்கு வடகிழக்கில் உள்ள அம்பலவாணர் வேலுப்பிள்ளையின் ஆதனத்தில் இருக்கும் கிணற்றின் தண்ணீர்ப்பங்கும் அக்கிணற்றில் இருந்து இவ்வாதனத்திற்கு உழவாய்க்கால் உரிமையும் உண்டு.

சோ. நரசிங்கம்
19-12-68 நீதிமன்ற விற்பனையாளரும் மதிப்பாளரும்
எம். 321 27-12-68 தொல்புரம்.

---

## தாயகத்து ஆதீனங்களில் ... ... ... ...
## ஸ்ரீ கன்னியா பகவதிக்கு புஷ்பாஞ்சலி

தமிழகத்தின் தென்கோடியிற் கடலோரத்திலுள்ள கன்யா குமரியில் உலகமாதாவான ஸ்ரீ பார்வதி அம்மை கன்னிப்பருவத்துடன் ஸ்ரீகன்யாபகவதியாகக் காட்சி அளித்துக் கொண்டு வருகின்றுள் தருமை ஆதீனம் ஸ்ரீ. கயிலை மகா சன்னிதானம் அவர்கள் அம்பாளுக்கு விசேஷ அபிஷேகங்கள் நடத்தி நறுமணமுள்ள புஷ்பங்களை அம்மையின் கழுத்து வரை சுற்றிலும் பரப்பி புஷ்பாஞ்சலி செய்து வழிபட்டார்கள்.

x x x

சிதம்பரம் ஸ்ரீ நடராஜப் பெருமான் திருக்கயிலாய பரம்பரைத்திருவாவடுதுறை ஆதீனம் 22-ஆவது மகாசந்நிதானம் ஸ்ரீ ல.ஸ்ரீ. அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகளும், திருக்கயிலாய பரம்பரைத் தருமபுரம் ஆதீனம் 25 ஆவது மகாசந்நிதானம் ஸ்ரீ ல ஸ்ரீ. கயிலைசுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளும் ஒன்று கூடி கார்த்திகைத் திங்கள் 18 ஆம் நாள் மாலை 7மணிக்கு ஸ்ரீ. நடராஜப் பெருமான் திருக்கோயிலுக்கு எழுந்தருளி ஸ்ரீ சிவகாம சுந்தரி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானுக்கு சிறப்பாக அர்ச்சனைகள் செய்து விலைஉயர்ந்த பொன்னுடைகள் சாற்றுபடி செய்து ஆராதனைகள் நடத்தி தரிசனம், செய்துக் கொண்டார்கள்.

கனக சபை நகரில் தருமை ஆதீனக் கட்டளை மடத்தில் ஸ்ரீ ல ஸ்ரீ. அம்பலவாண தேசிக பரமாசாரியசுவாமிகளுக்கு சிறப்பான வரவேற்புகள் அளித்தார்கள்.

x x

திருவாவடு துறை ஆதீனம் 22ஆவது மகாசந்நிதானம் ஸ்ரீ.ல ஸ்ரீ, அம்பலவாண தேசிகபரமாசாரியசுவாமிகள் தில்லையம்பதி ஸ்ரீ. நடராஜப் பெருமான் திருக்கோயில் சுற்றுமதிற் சுவர் திருப்பணிக்கு ரூபா 5000/- (ஐயாயிரம்) நன்கொடையைத் திருப்பணிக் குழுவினரிடம் அளித்துள்ளார்கள். ஆதீனத்தின் 21-ஆவது மகாசந்நிதானம அருளாட்சியால் சுற்று மதில் சுவர் திருப்பணிக்கு ரூபாய் 3500/- நன்கொடை வழங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

x x x

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுரம் ஆதினத்திற்குச் சொந்தமான திருக்கடையூர் ஸ்ரீ அபிராமிஅம்பாள் சமேத ஸ்ரீ, அமிர்தகடேஸ்வரர்கோயிலில் கார்த்திகை சோமவார 1008 சங்காபிஷேக விழா சிறப்பாக நடைபெற்றது, கார்த்திகைத் திங்கள் 10 ஆம் நாள் அன்று திருக்கடையூர் பிச்சக்கட்டளை எஸ்டேட் அதிபரான உயர் திரு. கே. கனகசபைபிள்ளை அவர்கள் ஸ்ரீ அமிர்தகடேஸ்வரருக்கு 2ஆவது சோமவார 1008 சங்காபிஷேகத்தையும் ஸ்ரீ அபிராமி அம்பாளுக்கு கோடி அர்ச்சனை துவக்கத்தின் 82 ஆவது லக்ஷார்ச்சனைப்பூர்த்திவிழாவையும், பஞ்ச மூர்த்திகளின் திரு வீதியுலாவையும் சிறப்பாக நடத்திவைத்தார்கள்.

திருவாவடு துறை ஆதீனம் ஸ்ரீ. ல. ஸ்ரீ மாக சந்நிதானம் அவர்கள் பிச்சக் கட்டளை எஸ்டேட்டு அதிபரான உயர் திரு கே. கனகசபைபிள்ளை அவர்களுக்கு பொன்னுடை போர்த்தி கௌரவப் படுத்தினர்.

'இந்துசாதனம்' சிதம்பர நிருபர்
ஸ்ரீ மா. பாலசுப்பிரமணியன்

---


யாழ்ப்பாணம்

## — ஐக்கிய இலாப நிதி —

கொம்பனி லிட்
( ஸ்தாபிதம் 1918 )

10,000-00 பங்குகள் ரூபா 5 விகிதமான 50,000-00

மாதாந்த சேமம் கட்டும் முறை.

மாசமொன்றுக்கு ரூபா 10-00 விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் கட்டுப் பணமும் வட்டியுமாக ரூபா 1000-00 திருப்பிக் கொடுக்கப்படும். ரூபா 100-00 விகிதமாகக் கட்டினால் ரூபா 10,000-00 கொடுக்கப்படும்.

சேமிப்பு பற்றுவரவு எச்சநிதி.

ரூபா 1500-00 க்கு குறையாமல் இருக்குமாயின் 1 வீத வட்டியுடன் சேமிப்புப் பற்று வரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட சேமம்.

சேமப்பணம் முறையே, 12, 24, 36, என்னும் மாச காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டி முறையே 7, 8, 9, வீதமாகக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடு வைத்துக் கொண்டும், சேமப்பணத்தைப் பிணையாக வைத்துக் கொண்டும் கடன் கொடுக்கப்படும் முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை எங்கள் காரியாலய மூலமாக அறிந்துகொள்ளலாம். — மனேஜர்


---

## பண்பு வேண்டும்?



பத்தர்: "நல்லை முருகன் திருக்கோவில் சமீபம் வேதாகம பாடசாலை நிறுவும் யோசனை சிதம்பரத்தில்வெளியாயிருக்கு!

சித்தர்: "செய்தி வெளிவந்து என்ன? 'வேதாகமநெறியைப் போற்றுகிறபண்பு'நம் மக்களிடம் வளரவேண்டுமே! ஆகட்டும்

—"நாயன்மார் - நாதன்"

---

## மணிவாசகர் விழா

ஈழத்துச் சிதம்பரம் மணிவாசகர் சபையினரால் நடாத்தப்பெறும் மணிவாசகர் விழா இவ்வருடம் 31-12-68 அன்று சைவப் பெரியார் ஸ்ரீமத் த குமாரசுவாமிப்புலவர் அவர்கள் தலைமையில் ஆரம்பமாகி மூன்றுநாட்களுக்கு நடைபெறும். 2-1-69 அன்றைய விழாவில் மூளாய் கூட்டுறவு வைத்திய சாலை டாக்டர் T. கங்காதரன் அவர்களின் புல்லாங்குழலிசையும் சங்கீத பூஷணம் சு. கணபதிப்பிள்ளை அவர்களின் இன்னிசைக் கச்சேரியும் இடம் பெறும். (கா. நி.)

---

## தமிழக அறிஞர் இலங்கை வருகை

மதுரைத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் செயலாளரும் தமிழக இலக்கிய அறிஞரும், பரிதி மாற் கலைஞரின் பெண் வழிப் பேரனுமாகிய புலவர் மணி. செஞ்சொற் செம்மல் திரு. வி. ஜீ. சீனிவாசன் பி. ஏ. எல்டி அவர்கள் இம்மாதம் 30ம் திகதி வரை இலங்கையிற் தங்கிப் பல நிகழ்ச்சிகளிலும் கலந்து சொற்பொழிவாற்றுவார்.

இம்மாதம் 30 ம் திகதி நடைபெற விருக்கும் கோப்பாய் திருவருள்தவநெறி மன்றத்தாரின் திருவாசக விழாவில் பிரதம பேச்சாளராக கலந்து கொள்வார்.

---

வண்ணை.

### நாவலர் மகாவித்தியாலய பழையமாணவர்சங்கம்

25-12-68 காலை 10 மணியளவில் மேற்படிவித்தியாலயத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் ஷெ பழையமாணவர் சங்கம் அங்குரார்ப்பணம் செய்யப்பெற்றுள்ளது. திரு, வை. சரவணமுத்து ஆசிரியர் தலைமை வகித்தார்.

நிர்வாகிகள் தேரிவு

போஷகர்: பண்டிதமணி. உயர்திரு. சி.கணபதிப்பிள்ளை தலைவர்: வித்தியாலய அதிபர், உபதலைவர்: திரு. வை. சரவணமுத்து, க. வை ஆத்மநாதசர்மா. Dr. V. தங்கராசசிங்கம், செயலாளர்: திரு. வ. கந்தசாமி. உபசெயலாளர் திரு. சி கந்தவேல், பொருளாளர்: திரு சி. மாரிமுத்து. மேலும் 9 பேர் நிர்வாக சபையினராகத் தெரிவு செய்யப்பெற்றனர்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இலங்கைத்தீவின் 1938-ஆம் ஆண்டின் 51-ஆம் இலக்க வர்த்தக மசோதாவிற் ஸ்தாபிக்கப்பட்டுள்ள இலங்கை சுதந்திர விமாக் கொம்பனி லிமிட்டெட் 185, யூனியன் பிளேஸ், கொழும்பு (ஈட்டு மசோதாவுக்குட்பட்ட உத்தரவாதம் பெற்றுள்ளது).

இல. M. B. 7123 எதிராக —வழக்காளி

1. கனகரெத்தினம் மகேந்திரன் மகேந்திராஸ் மில்ஸ், சுன்னாகம், யாழ்ப்பாணம்
2. கனகரெத்தினம் மகேந்திரன். பெண் நாகம்மா சுன்னாகம் யாழ்ப்பாணம்,
3. வேலுப்பிள்ளை கனகரெத்தினம் கைம்பெண் சுகிர்ணம்மா கரும்பிராய், யாழ்ப்பாணம். —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 7123-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் இரண்டு துண்டுக் காணியையும் அசைவுள்ள இயந்திரக் கருவிகளையும் 1969-ஆம் ஆு தை மீ 20-ஆம் திகதி (20-1-69) திங்கட்கிழமை முற்பகல் பத்து மணி தொடக்கம் முதலாம் காணியும், தை மீ 20-ஆம் திகதி (20-1-69) திங்கட்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் இரண்டாம் காணியும் தை மீ 21-ந் திகதி (21-1-69) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் சுன்னாகம் இல. 210 காங்கேசன்துறை வீதியிலுள்ள மகேந்திரா மில்ஸில் கீழ்சொல்லிய அசைவுள்ள இயந்திரக் கருவிகள் யாவும் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி. ரூபா 39,750-ம் 10-12-1964 தொடக்கம் 20-6-1966 வரைக்கும் ரூபா 37,500-க்கு 8 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 712-77 சதம்.

### ஆதன விபரங்கள்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப்பகுதி சங்கானை கோயிற்பற்று சங்கானை மேற்கு இறை 'குமரியோடையும் பெரியவளவு' மேரகில பா. நில இலா 6 (ஆறும்) அதைச் சேர்ந்தவைகளும், கட்டடங்களும் இதற்கு எல்லை கிழக்கும் தெற்கும் கார்த்திகேசு தம்பிராசாவுக்கும் பெண் சிவஞானச்செல்விக்குமுரிய ஆதனம். வடக்கு தம்பிராசா செல்லத்துரைக்கும் பெண் யோகம்மாவுக்குமுரிய ஆதனம். மேற்கு ரேட்டு, பதிவு இல. E 316/254.

2. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி கோப்பாய் கோயிற்பற்று கோப்பாய் வடக்கு இறை 'குஞ்சுந்தனும் மறு பிரிவுகளும்' பர. நில. இல. 4 குள் 6 அதைச் சேர்ந்தவைகளும் இதற்கு எல்லை கிழக்கு கணபதிப்பிள்ளை கைம்பெண் பொன்னுவுக்குரிய ஆதனம் வடக்கு அருணாசலம் சுப்பிரமணியத்துக்குரிய ஆதனம். மேற்கு வேலுப்பிள்ளை பொன்னுத்துரைக்கும் பெண் இராசம்மாவுக்குமுரிய ஆதனம். தெற்கு ரேட்டு, பதிவு இல K 181/213.

3 சுன்னாகம் இல. 210, காங்கேசன்துறை வீதியிலுள்ள மகேந்திரா மில்ஸில் இருக்கும் கீழ் சொல்லிய அசைவுள்ள இயந்திரக் கருவிகள் யாவும்.

1. ஒரு இல 1. லூயிஸ் கிறாண் கல்லர் (one No. 1 Lewis Grant Huller)
2. ஒரு 20 கோஸ் பவர் ஜி. இ. சி. எலெக்றிக் மோட்டார் (one 20 Horse Power G. E. C Electric Motor)
3. ஒரு பிறீமியர் கிறிண்டர் (one Premier Grinder)
4. ஒரு 7.5 கோஸ் பவர் ஜி. இ. சி. எலெக்றிக் மோட்டார் (one 7, 5 Horse Power G. E. C Electric Motor)
5. ஒரு ஒயில் எக்ஸ் பெலர் (one oil expeller)
6. ஒரு அரிக்கனட் கட்டர் (one Arecanut Cutter)
7. ஒரு எலெக்றிக் தண்ணி பம்பும், எலெக்றிக் மோட்டார் (one Electric water pump with Electric Motor)
8. ஒரு பொயிலர் (one boiler) )
9. ஒரு பிறன் சிவ்ரரும் சாவர்களும் (One Bran Shifters and Shafts)
10. கப்பிகள் இன்னும் மற்றைய இயந்திரங்களும் (Pulleys and all other machinery)

22, பெருமாள்கோவில் தெற்கு-ஒழுங்கை. யாழ்ப்பாணம், 16-11-68.

நா. ஸ்ரீஇரங்கநாதன்
கொம்மிஷனர் & விலைமதிப்பாளர்.
எம். 314 27—12—68

ஆறிருதடந்தோள்வாழ்க வறுமுகம்வாழ்க வெற்பைக்
கூறுசெய்தனிவேல்வாழ்க குக்குடம்வாழ்க செவ்வேள்
ஏறியமஞ்ஞைவாழ்க யானைதன்னணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்கசீரடியாரெல்லாம்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு இல. M. B. 9799.

சின்னப்பு கதிரேசு - மயிலிட்டி வடக்கு, மயிலிட்டி
எதிராக —வழக்காளி

1. முத்தான் பூதன் 2. மனைவி - மரியை
இருவரும் மயிலிட்டி வடக்கு. மயிலிட்டி —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 9799-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் இரண்டு துண்டுக் காணிகளை 1969-ம் ஆு மாசி மாதம் 2-ம் உ ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: முதல் வட்டி ரூபாய் 1858- சதம் 33-ம் 7-3-66 தொடக்கம் 22-7-68 வரைக்கும் ரூபாய் 1000-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5% வட்டியும் கோட்டுச் செலவு, ரூபாய் 323 சதம் 40. அதாவது ஏற்பட்ட செலவு ரூபாய் 201 சதம் 45. வெலியாத்து செலவு ரூபாய் 56 சதம் 45 இனிமேல் ஏற்படும் செலவு ரூபாய் 65 சதம் 50.

### ஆதனங்களின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் வடக்குப் பகுதி மயிலிட்டி கோயிற்பற்று மயிலிட்டி இறை "சீமா" சில உறுதிகளால் இணங்க பரப்பு நிலம் இலாச்சம் 15. மேலும் மற்றும் உறுதிகளால் இணங்க பரப்பு நிலம் இலாச்சம் 16ம் வடக்கும் தெற்கும் எல்லைகளில் இருக்கும் வேம்புகளின் பங்கும் செய்பயிர் வான்பயிர்களும். இந்ததுண்டுகளில் பிரிவிடா 11/72 பாகத்தில் பிரிவிடா ½ பங்கு.

எல்லை: கிழக்கு: ஒழுங்கையும் சின்னத்தம்பிசுப்பரின் ஆதனம். வடக்கு: கந்தன் வீரனுடையதும் மறுபேர்களுடையதும் ஆதனம் மேற்கு: பண்டாரம் மார்க்கண்டனுடைய ஆதனம் தெற்கு பெரியார் வைரவியினுடைய உரிமைக்காரரின் ஆதனம்,
பதிவு இலக்கம் H 292/146 தொடர்பு H 345/98 வரையும்,

2. ஷெ மயிலிட்டி கோயிற்பற்று மூலைவை இறை "தாலே அடி' பரப்பு நிலம் இலாச்சம் 4, இதில் தெற்குப்பக்கமாக பிரிக்கப்பட்ட பரப்பு நில இலாச்சம் 2ம் வீடுகளும் புளியமரத்தின் பங்கும் இந்த நில: இலா 2 பரப்பு காணிக்கு எல்லை: கிழக்கு: குட்டியன் மனைவி குழந்தையின் ஆதனம் வடக்கு: நாகன் மனைவி தெய்வியின் ஆதனம் மேற்கு: கந்தப்பிள்ளை அப்பாப்பிள்ளையின் ஆதனம் தெற்கு: ஒழுங்கை - இதடங்கலும். பதிவு இல H 328/170

107, பெரியதெரு, யாழ்ப்பாணம், 24-11-68

எ.பி.பி. எதிர்மன்னசிங்கம்,
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்,
எம். 310. 27—12—68

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண டிஸ்திறிக் கோட்டில்

வீமன் காமம் வயித்திலிங்கம் நாகலிங்கம் கை. பெ. நாகரத்தினம்
இல M B 7672 எதிராக —வழக்காளி
யாழ்ப்பாணம் நல்லூர் முருகேசு ஒழுங்கை 7/3, அல்பேற் தம்பாபிள்ளை ஜெயசிங்கமும் பெண் செல்வரத்தினமும் —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M.B. 7672-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக் காணி 1969-ம் ஆு மாசி மீ 25-ந் திகதி (25-2-69) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபா 11200- இதில் ரூபா 7500 க்கும் 20-8-56 தொடக்கம் 2-8-66 வரைக்கும் 100க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீதவட்டியும் கோட்டுச் செலவு ரூபா 400-79 செலவழித்த செலவு ரூபா 299/63 வெலியாத்து செலவு ரூபா 67/45 எதிர்வரும் செலவு ரூபா 33/71,

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி நல்லூர் கோயிற்பற்று நல்லூர் இறை "உலகன்செட்டிவளவு' பர நீ. லா 10ம் குளி 1/5 ம் இதில் முன் சொல்லப்பட்ட 350-ம் நம்பர் அளவு படத்தின் படி 2ம் துண்டுக் காணியென குறிக்கப் பட்டதின் விஸ்தீரணம் பர நில 3ம் குளிகள் 17ம் இககாணி பர நில 3 குளிகள் 17ல் வீட்டுப்பங்கும் கார்விடும் கொட்டிலும் இககாணியை அடுத்திருக்கும் 3ம் துண்டுக் காணியில் அரைவாசிப்பங்கும் செய்பயிர் வான்பயிர்களும் எல்லை கிழக்கு சண்முகம் தம்பிஐயாவினுதனமும், பங்காளருக்கும். முன் சொல்லப்பட்ட 350ம் நம்பர் அளவுபடத்தின் படி முதலாம் துண்டுக்காணியும் வடக்கு முன் சொல்லப்பட்ட படத்தின் படி 1ம் துண்டும் 3ம் துண்டுக் காணிகளும் மேற்கு 1ம் துண்டுக்காணியும் முருகேசு சிற்றம்பலத்தினுதனமும் தெற்கு கனகசபாபதி பெண் நாகம்மாவுக்கும் பங்காளருக்கு முரிய ஆதனம். D 357/36 ல் பதியப் பட்டிருக்கிறது.

24-ம் நம்பர், 1-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம், 10-11-68.

க. சுப்பிரமணியம்,
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
(எம் 312 20-12-68)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

கடம்பர் கோயில் சுப்பர் ஆறுமுகம், கந்தர்மடம் யாழ்ப்பாணம் — வழக்காளி

இலக்கம் M. B. 8508
எதிராக
சுப்பர் வேலுப்பிள்ளை, காரதீவு மேற்கு, காரதீவு —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்றிக் கோட்டின் M B 8508 ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் துண்டுக் காணி 1969 ம் ஆு (9-1-69) ஜனவரி மீ 9ம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: முதல் வட்டி ரூபாய் 12950/-ம் 10-10-66 தொடக்கம் 16-3-67 வரைக்கும் ரூபாய் 10000/-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 479-68 சதம் இதில் ரூபாய் 2500/- கொடுபட்டது.

### ஆதன விபரம்

1 வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக் தீவுப்பகுதி காரதீவு தசகோடை 'நெசச்சிக்காடு' பரப்பு நில லாச்சம் 9¼ யும் வீடும் பயிர்களும் எல்லை கிழக்கு சின்னத்தம்பி கந்தையாவுக்கும் மறுபேருக்கும் உரிய ஆதனம் வடக்கு பொன்னம்பலம் ஆறுமுகத்துக்குரிய ஆதனம் மேற்கு சுப்பர் ஆறுமுகத்தின் உரிமைக்காரருக்குரிய ஆதனம் தெற்கு நடராசா பெண் பராசக்திக்குரிய ஆதனமும் கிழக்கெல்லைக் காணியின் சுப்பர் ஆறுமுகத்தின் உரிமைக்காரருக்குரிய தெற்கெல்லை ஓரமாக வடக்குப்பக்கம் போகும் பாதை உருத்தும் பதிவு இல. 316/197

2 மேற்படி காரதீவு மேற்கு 'மாணிக்கை' பரப்பு நெல்லு லாச்சம் 23¼ இதற்கு எல்லை கிழக்கு ஆறுமுகம்பெண்செல்லம்மாவுக்குரிய ஆதனம் வடக்கு சுப்பர் இராமலிங்கத்துக்கும் மறுபேருக்கும் உரிய ஆதனம் மேற்கு காசிநாதர் இராமச் சந்திரனுக்குரிய ஆதனம். தெற்கு ரேட்டு பதிவு இல. C 355/103

3 மேற்படி டிஸ்றிக் வலிகாமம் மேற்கு சங்கானை கோயிற்பற்று தொல்புரம் இறை 'கொட்டுபுலமும்' கோடிவிதிலைக்காடு' பரப்பு நில லாச்சம் 49 இதற்கு எல்லை கிழக்கு கை ஒழுங்கை வடக்கு இலுப்பையோலை நாராணிக்கும் பங்காளருக்கும் உரிய ஆதனம் மேற்கு சுப்பிரமணியம் கதிர்வேல்பிள்ளைக்குரிய ஆதனம் தெற்கு ரோட்டும் கோவிந்தி சின்னத் தம்பிக்குரிய ஆதனம் பதிவு இல E 337/60

4 மேற்படி இறை கொட்டுபுலம் பரப்பு நில லாச்சம் 12 ம் அதைச் சேர்ந்தவைகளும் இதற்கு எல்லை கிழக்கு நாகநாதர் சின்னத்தம்பிக்குரிய ஆதனம் வடக்கு ஒழுங்கை மேற்கு கார்த்திகேசு நாராயணபிள்ளைக்குரிய ஆதனம் தெற்கு வயிரமுத்து சின்னத்தம்பிக்கும் பங்காளருக்குரிய ஆதனமும் மேற்காட்டிய 3 ம் காணியும் பதிவு இல E. 347/297

சி. செ. மாரிமுத்து,
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
சிதானை வளவு, சித்தன்கேணி
5-11-68. எம் 322. 27-12-68

## கோட்டு விற்பனவு விளம்பரம்

பண்ணாகம் தெற்கு,
சங்கானை மேற்கு.
சீனிவாசகம் சி. சுப்பிரமணியம்
வழக்காளி

வழ. இல. M B. 9437
எதிராக
பணிப்புலம்,
சங்கானை மேற்கு.
இராமநாதர் இரத்தினசிங்கம்
எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B. 9437-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக் காணி 1969-ம் ஆண்டு தைமாதம் 27-ந் திகதி (27-1-69) திங்கட் கிழமை காலை 10-30 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்,

தீர்வைத் தொகை:- ரூபா - 1043-ம், 23-9-67 தொடக்கம் 29-2-68 வரைக்கும் ரூபா- 750-க்கு 9 வீத வட்டியும், அதன்பின் முழுத்தீர்வைத்தொகைக்கும் பணம் முற்றாக இறுபடும் வரைக்கும் 6 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 347-35 சதமும்.

### காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி பண்டத்தெருப்பு கோயிற்பற்று, சில்லாலை இறை. 'முதலைப் பிட்டி' தெம்பரப்பு 11¾ எல்லை கிழக்கு கதிரசாமி விசுவலிங்கத்துக்கும் பெண் சின்னம்மாவுக்குமுரிய ஆதனம். வடக்கு வாய்க்கால். மேற்கு நக்கிலாப்பிள்ளை ஜேமிசுக்கும் கதிரவேலு சரவணமுத்துவுக்குமுரிய ஆதனம்- தெற்கு பஸ்தியாம் பிலேபிராசிஸின் பிள்ளையின் ஆதனம் E 368/197-ல் பதியப்பட்டது. இதடங்கலிலும் சொரியலாக அரை (½) ப்பங்கு.

சே. பாண்டித்துரை
கொமிஷனர், விலைமதிப்பாளர்
உத்தரவுபெற்ற ஏலதாரர்
மல்லாகம். 13-12-68
(எம. 317 27—12—68)

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில், 2 ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மு. மயில்வாகனம் அவர்களால் 27—12—1968 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பத்திராதிபர்: திரு. மு. மயில்வாகனம் அவர்கள்.